**கொத்மலே பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 06 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூன் 19 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொத்மலே பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை வங்கியின் பூண்டுலுஓய கிளையில் பேணிச்சென்ற 71562716 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் ரூபா 113,816 ஆன மீதி நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்கீட்டிலிருந்து விடுபட்டதாக ஏற்றுக் கொள்கின்றேன் |
| (ii) | வருமானக் கடன்பட்டோர் மீதியில் தவறுதலாக பட்டியலிடப்பட்ட ரூபா 18,600 நீர் கட்டணம் மற்றும் ரூபா 29,989 ஆன ஏக்கர் வரி உள்ளடக்கப்பட்டிருந்தன | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன்பட்டோரைப் பதிவழிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் இதுரை அங்கீகாரம் கிடைக்கவில்லை. அனுமதி கிடைத்ததும் கணக்கிலிருந்து அகற்றப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நடைமுறையல்லாத சொத்துக்களின் மொத்தம் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்திலிருந்து பங்களிக்கும் கணக்கிற்கு இடையே ரூபா 4,339,807 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஐந்தொகை சமப்படுத்தப்பட்டதுடன் இவ்வாறான வேறுபாட்டை கண்டுபிடிக்கப்படவில்லை. |
| (iv) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 761,000 ஆன செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வுக் கட்டணங்களுக்காக இரண்டு கணக்குகள் உள்ளதுடன் கட்டண ஒதுக்கீட்டு கணக்கிலிருந்து செலுத்தப்பட்ட தொகை கழிக்கப்படாமல் இருப்பதால் இவ்வேறுபாடு தென்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் கணக்கு தயாரிப்பின் போது சீராக்கம் செய்கின்றேன். |
| (v) | நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திரவத்தன்மை ஒழுங்கில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அடுத்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திரவத்தன்மையின் பிரகாரம் சமர்ப்பிக்கின்றேன் |

**(ஆ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சிய காலம் கடந்திருந்த நிலுவை மீதிகளின் பெறுமதி ரூபா 5,253,349 ஆக இருந்தது. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இம்மீதி 2011 ஆம் ஆண்டிலிருந்து காணப்படுவதுடன் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு மேற்பட்டுள்ள காலம் கடந்துள்ள செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,396,141 ஆக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்யப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண கடன் கொடுத்தோர் மீதியில் நிறுத்திவைத்தல் தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஓய்வூதிய தொகையில் ரூபா 50,000 |

| | |
|---|---|
| இருந்தது. | வீதம் மாதாந்தம் கொடுப்பனவு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணகள் முகாமைத்துவ தீர்மபனங்களுடன் இணங்காமை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் | மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குதல் நிராகரிக்கப் பட்டிருக்கையில் சட்ட விரோதமாக சபையால் மாடுகள் கொல்லுமிடம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத் தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாட்டிறைச்சி கடைகள் மூலம் 2 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானமொன்று சபைக்கு கிடைப்பதால் இதனை மூடிவிடுவதால் சபைக்கு வருமானமொன்று இழக்கும் ஆபத்தொன்று காணப்படுகின்றது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்பட்டு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 35,169,328 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,359,070 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 4,902,000 | 5,051,858 | 3,418,229 | 1,633,630 | 4,229,000 | 4,404,781 | 3,217,500 | 1,187,281, |
| வாடகை | 4,501,000 | 4,652,465 | 4,651,248 | 138 | 3,960,000 | 3,706,357 | 3,596,357 | 110,000 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 13,222,000 | 4,226,866 | 4,226,866 | - | 9,304,000 | 3,317,119 | 3,317,119 | - |
| ஏனைய வருமானம் | 6,265,000 | 3,674,910 | 3,411,407 | 263,503 | 15,968,000 | 21,590,999 | 21,590,999 | - |
| மொத்தம் | 28,890,000 | 17,606,099 | 15,707,750 | 1,897,271 | 33,461,000 | 33,019,256 | 31,721,975 | 1,297,281 |

**2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) 32 முதல் 80 வரையான விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சகல நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை நிலுவை வருமானத்தில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. ஒரு பகுதியை பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் எஞ்சியவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 1,661,486 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 5,281,160 ஆன முத்திரைக் | குறித்த தொகையை அறவிட்டுக் | இதுவரை நிலுவையில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது |

| | | |
|---|---|---|
| கட்டணங்கள் வேண்டியிருந்தது. | அறவிடப்பட | கொள்ள வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை (Out Come) அடையாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் பிரதேச சபையின் புதிய இரண்டு மாடிக் கட்டிடத்தின் முதலாவது கட்ட நிர்மாணத்திற்காக ரூபா 11,112,792 தொகை செலவிடப்பட்டிருந்தது. சபையிடம் போதியளவு நிதியம் காணப்பட்ட போதும் எஞ்சிய வேலைப் பகுதிகளின் நிர்மாணம் 2020 ஏப்ரல் வரையிலும் ஆரம்பிக்கப்படாமை காரணமாக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொது மக்கள் பணத்திலிருந்து நலன்களை வழங்குவதில் தாமதமானமை மற்றும் எதிர்கால விலையேற்றம் போன்ற பாதகமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுக்க கூடிய நிலைமையொன்று உருவாகியிருந்தது. | செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | முதலாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு இரண்டாம் கட்டத்திற்காக மதிப்பீடொன்று வழங்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் மத்திய மாகாண பொறியியலாளர் திணைக்களத்தினால் வேண்டுகோள் விடப்பட்ட போதும் இதுவரை மதிப்பீடு கிடைக்காமையால் கட்டிடத்தின் எஞ்சிய வேலைகள் ஆரம்பிக்க முடியவில்லை. |
| (ii) | ரம்பொடை நீர்வீழ்ச்சியை சுற்றுலா கவர்ச்சி இடமொன்றாக அபிவிருத்தி செய்யும் திட்டத்திற்கு ரூபா 5,648,141 தொகை ஒப்பந்தம் | செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது 80% அளவிலான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 2020.07.30 திகதி அளவில் முழு |

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்டிருந்ததுடன் அபிவிருத்தி செயற்பாடுகள் 2019 சனவரி 21 ஆந் திகதி முதல் 2019 யூன் 19 ஆந் திகதி வரையான யான காலப்பகுதியில் நிறைவேற்றுவதற்க உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 20 அந் திகதி வரையிலும் அபிவிருத்தி வேலைகள் நிறைவுபெற்றிருக்கவில்லை | | வேலையையும் ஒப்பந்தக்காரர் பூர்த்தி செய்து தருவதாக உறுதி அளித்தள்ளார். |

**(ஆ) கழிவுப்பொருள் முகாமைத்துவம**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள் வெளியேற்றப்படும் கொஸ்கஹபத்தன மற்றும் ஹபுகஸ்தவாவ திறந்த வெளியில் கழிவுகள் இடப்பட்டிருந்தமை மற்றும் பொலித்தீன் உட்பட கலப்பு கழிவுப்பொருள் முறையாக அகற்றுதல் இடம்பெறாமை அவதானிக்கப்பட்டது. | முறையான கழிவுப்பொருள் முகாமைத்தவம் தயாரிக்கப்பட வேண்டும். | கழிவுப்பொருள் மீள் சுழற்சிக்கான இனங்காணப்பட்ட காணியை கையேற்ற சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளதுடன் பிரதேச செயலகத்தினால் காணி விடுவிக்கப்பட்ட பின் இச்சிக்கலை தீர்வுசெய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரதேச சபையால் செயற் படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரதாகல்கொட மற்றும் ஷீன் நீர் செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 1,897,315 மற்றும் ரூபா 1,083,915 செலவிடப்பட்டு நீர்க்குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் உரிய நீர் முன்மொழிவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை | பொருத்தமான காணியொன்றை கையேற்று விரைவில் நீர் முன்மொழிவுத் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஷீன் நீர் வழங்கல் திட்டத்தால் நீர் வழங்க முன்மொழியப்பட்ட அலகுகளுக்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நீர் வசதிகளை வழங்கியுள்ளதுடன் ரதாகல்கொட நீர் திட்டத்தில் நீர் சேமிப்பு தாங்கியை நிர்மாணிக்க |

| | | | |
|---|---|---|---|
| | | | பொருத்தமான காணி இல்லாததால் பொருத்தமான காணியை கையேற்று எதிர்வரும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 859,070 செலவினம் மேற்கொண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தவலந்தன்ன பொது மலசல கூடத்திற்கு நீர் வசதிகள் வழங்காமையால் பயன்படுத்த முடியாமல் இருந்தது. | நீர் இணைப்பினை வழங்கி மலசல கூடத்தை பயன்பாட்டு நிலைமைக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தொடர்புடைய கழிப்பறைகள் 2020 ஆம் ஆண்டிற்கான டெண்டர்கள் மூலம் குத்தகைக்கு விளம்பரப்படுத்தப்பட்டிருந்த போதிலும், விண்ணப்பதாரர்கள் முன்வரவில்லை நீர் விநியோகத்தை சீராக்க நபரைத் தேர்ந்தெடுத்து அதை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 658,416 செலவில் கொத்மலே புதிய நகரத்தில் வாரச் சந்தையை சுற்றி பாதுகாப்பு வேலி நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் வாரச் சந்தைக்காக நிர்மாணிக்கப்பட்ட சில கட்டிடங்கள் மற்றும் பொது மலசலகூடம் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் புற்கள் வளர்ந்து விளைளவற்றுக் காணப்பட்டன. | விளைவற்றுக் காணப்படும் ஆதனங்களை பயன்பாட்டிற்கு எடுக்ககூடிய வகையில் அமைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | பொது கழிப்பறை தற்போது உக்காத மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்த பயன்படுத்தப்படுகிறது, மேலும் இது தொடர்பான பழுதுபார்ப்புகளை மேற்கொண்டு, புதிய நகரின் வாராந் சந்தையை அந்த இடத்தில் நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் நிர்வாக விதிகளின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்இ | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களுடன் வேறுபாட்டிற்காக காரணங்களுடன் கூற்றொன்று சமர்ப்பிக்கின்றேன். |